(8) இரங்கற் குறிப்பு.

ஈ. வே. ரா. மணியம்மையார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களே, மற்ற உறுப்பினர்களே, ஒரு துக்ககரமான செய்தி. நம்முடைய ஈ. வே. ரா. மணியம்மையார் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள் என்ற செய்தி வந்தது. அவர்களுக்கு மரியாதையும், அனுதாபமும் தெரிவிக்கிற வகையில் அனைவரும் ஒரு நிமிஷ நேரம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–38 மணி அளவில் ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

305. தமிழ்நாடு, 1960ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 31—12—1977ஆம் தேதியிடப்பெற்ற 3495 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*306. 31—12—1974 ஆம் தேதியோடு முடிவடைகிற ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 6-வது ஆண்டு அறிக்கையும் அதன் மீதான தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 130. கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

---

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

† 14—3—1978 அன்று அனுப்பப்பெற்றது.